# மெட்ரோ நேரம் மாற்றம்

**சென்னை, நவ. 10–**
சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்பட்டு வருகிறது.

இந்த ரயில், ஞாயிற்றுக் கிழமைகளில், காலை, 8:00 மணியில் இருந்து இரவு, 10:00 மணி வரை இயக்கப்பட்டு வந்தது. இன்று முதல், ஞாயிற்றுக் கிழமைகளில், மெட்ரோ ரயில் போக்குவரத்து, காலை, 6:00 மணியில் இருந்து இரவு, 11:00 மணி வரை இயக்கப்படும்.

ரயில்கள், 7 நிமிட இடைவெளியில் இயக்கப் படும்.